Date. 21.03.2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

OS.03/2015

**பி.வா.சா. 2**

**பெயர். திரு. தினகரன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியார் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு 67 வயதாகிறது. நான் விவசாயம் செய்து வருகிறேன். சங்கர், பாபு ஆகியோர் எனக்கு சிறு வயதிலிருந்தே பழக்கம். பஞ்சாயத்து 2012 மாசி மாதம் நடந்தது. எங்கு நடந்தது என்றால் பாபு வீட்டில் பஞ்சாயத்து நடந்தது. எழுத்து பூர்வமாக பஞ்சாயத்து தீர்வு எதாவது பேசினார்களா என்றால் இல்லை. பஞ்சாயத்திற்கு யார் என்னை கூப்பிட்டார்களா என்றால் என்னை கூப்பிட்டார்கள். நான் தாமதமாக போனேன். நான்போவதற்குள் பஞ்சாயத்து பேசி முடித்துவிட்டார்கள். என்னை தவிர்த்து இந்த குடும்பத்தார்கள் தவிர வேறு யாராவது இருந்தார்களா என்றால் பாலசுப்பிரமணியன் என்பவரும், கருணாநிதி என்பவரும் இருந்தார்கள். அவர்கள் இருவரையும் எனக்கு தெரியும். அவர்கள் இருவரும் அந்த ஊர்க்காரர்கள். அவர்களையும் எனக்கு தெரியும். என்ன பேசி முடித்தார்கள் என்று நான் கேட்டேன். அவர்கள் இரண்டு தங்கைகளுக்கும் ஆளுக்கு 33 சென்ட் நிலமும், அம்மாவிற்கு 18 சென்ட் நிலமும் கொடுக்கபோவதாக பேசி முடித்ததாக சொன்னார்கள். பத்திரம் எழுதபோகிறோம் சாட்சி போ டுவதற்கு கூப்பிடுகிறோம் அப்போது வாருங்கள் என்று

சொன்னார்கள். சகோதரிகளுக்கு திருமணம் செய்து சீர் செய்ததால் சொத்தில் பங்கு கொடுக்கவில்லை என்றால் ஆமாம். மூன்று சகோதரிகளுக்கும் திருமணம் ஆனது , சீர் கொடுத்தது ஆகிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. ஏன் என்னிடம் காசு கேட்டார்கள் என்றால் விவசாயத்திற்கும், திருமணத்திற்கும் என்னிடம் காசு கேட்டார்கள். நானும் கொடுத்துள்ளேன். பிறரிடம் வாங்கியும் கொடுத்துள்ளேன். நான் பணம் கொடுத்து பைசல் ஆனதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அதை நான் பைசல் ஆனவுடன் கிழித்து போட்டுவிட்டேன். பாக பத்திரத்தில் அவர் அவர்களுக்கு கொடுத்த சொத்தின் மதிப்பு போடப்பட்டுள்ளதா என்றால் போடவில்லை. நான் சொத்து விவரத்தை படித்து பார்த்தேனா என்றால் கையெழுத்து போடும் போது பத்திரத்தை படித்து பார்த்தேன். மற்ற விவரங்கள் ஞாபகம் இல்லை. நான் எனக்கு பக்கத்து இடம் என்பதால் எதையாவது மாற்றி விட போகிறார்கள் என்று படித்து பார்த்தேன். என்னுடன் சாட்சி போட வந்த மற்றொரு சாட்சி பச்சையப்பன் எனது நண்பர். ஆனால் பிரதிவாதிகளுக்கு அவர்கள் யார் என்று தெரியாது. அந்த பச்சையப்பனை நான் தான் அழைத்து சென்றேன். நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் நிறைய பஞ்சாயத்துக்கள் செய்துள்ளேன். பத்திரத்தை பதிவு செய்ய பாபுவும், சங்கரும் கொடுத்தார்கள். மதியம் 12- 1 மணிக்குகொடுத்தார்கள். 2 முதல் 3 மணிக்குள் பதிந்து முடித்துவிட்டார்கள். பத்திரம் பதிந்த அன்று பந்த் இல்லை. பத்திரம் எழுதுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் நான் தான் செய்தேன் என்றால் இல்லை. 1, 2 பிரதிவாதிகள் தான் செய்தார்கள். தரப்பினர்கள் இரண்டு சாட்சி, எழுத்துக்காரர் ஆகியோர் பதிவு அலுவலகத்திற்கு போகியிருந்தோம். பாபுவும், சக்திவேலும் புதுச்சேரி கனகசெட்டி

குளத்தில் வசித்து வந்தார்கள். அசல் பத்திரத்தை யார் வாங்கி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. என்னை தற்போது சாட்சி சொல்ல பாபுவும் , சக்திவேலும் கூப்பிட்டார்கள். சகோதரிகள் யார் என்ன வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் இடம் பற்றவில்லை கூடுதலாக கொடுங்கள் என்று வழக்கு போட்டுள்ளார்கள். அக்காள், தம்பிகளுக்குள் கூட குறைய பிரித்துக்கொள்வதில் எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை. நான் 1, 2 பிரதிவாதிகளுக்கு மிகவும் நெருங்கியவர் என்பதால் வாதிகளுக்கு குறைந்து சொத்து கொடுப்பதில் நானும், அவர்களுக்கு உடந்தையாக இருந்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல எந்த பஞ்சாயத்தும் நடைபெறவில்லை என்றும், வாதிகளுக்கு பாகம் குறைத்து கொடுப்பதாக அவர்கள் சொல்லவில்லை என்றும், அதை வாதிகள் ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. பத்திரம் பதிவு செய்த அன்று பந்த் நடந்தது என்றும், அதனால் அவர்களை பத்திரத்தை படிக்க விடாமல் அழுத்தம் கொடுத்து பத்திரத்தை பதிவு செய்து விட்டேன் என்றால் சரியல்ல.